**‘அத்திப் பூ’ மலேசியத் தமிழ்ப் பெருங்காப்பியமா?**
**Is ‘*Atti poo*’ a Malaysian Tamil Epic?**

நவீன் கணேசன்/ Navin G Ganeson[1]

**Abstract**

The main objective of this qualitative study is to identify the epic major grammatical elements in Malaysia’s ‘*Atti poo*’ epic. On top of that, this study explains the epic grammatical elements prevalent in ‘*Atti poo*’. A descriptive approach has been utilized using books and research articles suitable for library research. All information has been analyzed based on the objective of the study. The research data has been classified according to the purpose of the study, and textual analysis has been applied. The results reveal the discovery of 10 essential epic grammatical elements that categorise ‘*Atti Poo*’ as a *Perungapiyam*.

Date of submission: 2022-12-02
Date of acceptance: 2022-12-10
Date of Publication: 2022-12-28
Corresponding author’s Name:
Navin G Ganeson
Email:
navingganeson@gmail.com

**Keywords:** Attip poo, Perungapiyam, Malaysia, Epic grammar

**முன்னுரை**

காப்பியம் என்ற சொல்லுக்கு முன்பு அந்த வகை இலக்கியத்தைப் பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்றே குறித்துள்ளனர் (Gurumoorthy, 2021). காப்பிய வரலாறு கி. பி இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தொடங்கி வளர்ந்துள்ளது (Narayana, 2019). காப்பியம் என்றால் என்ன? காப்பியம் என்பது இலக்கண மரபுகளைக் காத்து எழுதப்படும் கவிதை இலக்கிய வடிவங்களில் ஒன்றாகும். இதைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பெருங்காப்பியம், அறம், பொருள், இன்பம், வீடு என்பவையோடு ஈடு இணையில்லாத் தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றபடுவது. மேற்குறிப்பிட்ட நான்கு பொருளையும் குறிப்பிடாமல் சில பொருள் மட்டும் எடுத்துரைப்பது சிறுக்காப்பியமாகும்.

[1] The Author is a student in in the Fakulti Bahasa Dan Komunikasi, Universiti Pendidikan Sultan Idris, Malaysia. navingganeson@gmail.com

இத்தகைய காப்பிய இலக்கியமானது, மலேசியாவில் தமிழ்க்கவிதையான மரபு கவிதை 1863ஆம் ஆண்டுத் தொடங்கி வளர்ந்த பன்னிரண்டு காலக் கட்டங்களில் பலரால் இயற்றப்பட்டுள்ளது (Samikkanu Jabamoney & Rajantheran, 2020). மலேசியாவில் தமிழ்ப் பெருங்காப்பிய அடிப்படையில் மலேசியக் காப்பியங்கள் எழுதப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்வதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு நெறிமுறை**

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**தண்டியலங்காரத்தில் காப்பிய இலக்கணம்**

கி.பி 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'தண்டியலங்காரம்' நூல்தான் காப்பிய இலக்கணத்தை வகுத்துள்ளது. சான்றாக,

*"பெருங்காப் பியநிலை பேசுங் காலை*
*வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்*
*றேற்புடைத் தாகி முன்வர வியன்று*
*நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்*
*தன்னிக ரில்லாத் தலைனை யுடைத்தாய்*
*...*
*கற்றோர் புனையும் பெற்றிய தென்ப"*

(தண்டியலங்காரம், பொதுவணியியல், நூற்பா 8-அவற்றுள், பெருங்)

என முடியும் தண்டியலங்கார நூற்பாவில் காப்பிய இலக்கணத்தைக் கூறுகிறது. வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைத் தொடக்கத்தில் பெற்று வரும் அல்லது அவற்றுள் இரண்டோ மூன்றோ பெற்றுக் காப்பியம் தொடங்குதல்; அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய

நாற்பொருளைப் பயனாகத் தருவதாக அமைத்தல்; தன்னிகர் இல்லாத தன்மை உடையவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டிருத்தல்; மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரனின் தோற்றம் ஆகியவற்றைப் பற்றிய வருணைனைகளைக் கொண்டிருத்தல்; திருமணம் புரிதல், முடிசூடல், சோலையில் இன்புறுதல், நீர் விளையாடல், மதுவுண்டு களித்தல், மக்களைப் பெற்றெடுத்தல், ஊடல் கொள்ளுதலும் புணர்ச்சியில் மகிழ்தல் முதலிய நிகழ்வுகளைக் கொண்டிருத்தல்; அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தல், தூது செல்லல், போர் மேற்கொண்டு செல்லுதல், போர் நிகழ்ச்சி, வெற்றிப் பெறுதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுதல்; சந்தி எனப்படும் கதைப்போக்கு, கதைத் தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு என்ற வரிசைப்படி அமைந்திருத்தல்; அமைப்பு முறையில் பெருங்காப்பியம் உட் பிரிவுகளுக்குச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம், காதை, படலம், காண்டம் என்ற பெயர்களில் ஒன்றைப் பெற்றிருத்தல்; பெருங்காப்பியம் எண்வகைச் சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்புகளும் கேட்போர் விரும்பும் வண்ணம் அமைக்கப்பட்டிருத்தல்; கற்றறிந்த புலவரால் புனையப்பட்டதாக இருத்தல் என ஆகிய பத்துக் கூறுகளும் காப்பிய இலக்கணத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தப் பத்துக் கூறுகளையும் பெற்றிருக்கும் காப்பியத்தைப் ‘பெருங்காப்பியம்’ என்றும் ஒரு சில கூறு விடுபட்ட காப்பியத்தைச் ‘சிறுகாப்பியம்’ என்று வகுத்துள்ளனர்.

**‘அத்திப் பூ’ காப்பியம்**

மலேசியத் தமிழ் காப்பியங்களில் அத்திப்பூ எனும் காப்பியம் கவிஞர் இரா. பாண்டியன் அவர்களால் எழுதப்பட்டது ஆகும் (Samikkanu Jabamoney & Rajantheran, 2020). இக்காப்பியம் 1990ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை பினாங்கில் உள்ள செந்தமிழ்க் கலா நிலையம் வெளியீடு செய்துள்ளது. இக்காப்பியம் மரபு வழுவாமல் 4 காண்டம், 55 படலம், ஏறத்தாழ 2000 பாடலைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் காப்பியம் விருத்தப் பா, அகவல், தரவு கொச்சகம், தாழிசை, கலித்துறை எனப் பா வகையினால் சந்த நயத்தோடும் ஓசை நயத்தோடும் எழுதப்பட்டுள்ளது (Pandiyan, 1990). அத்திப் பூ காப்பியம் இனவேறுபாட்டை அழித்தல் என்பதையே முக்கிய நோக்கமாக வைத்துப் படைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து, மனிதப் புறக்கணிப்பை நீக்குதல், சமத்துவத்தை வளர்த்தல், நட்பை வாழ்த்துதல், கயமையைக் களைதல் போன்றவற்றையும் சிறப்பு நோக்கமாக வைத்து எழுதப்பட்டுள்ளது.

**'அத்திப் பூ' காப்பியத்தில் பெருங்காப்பிய இலக்கணம்**

தண்டியாலங்காரப் பெருங்காப்பிய இலக்கண அடிப்படையில் இக்காப்பியம் பெருங்காப்பியத்திற்கு உரிய அனைத்துக் கூறுகளையும் கொண்டு இயற்றப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதே இப்பகுதியின் நோக்கம்.

வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைத் தொடக்கத்தில் பெற்று வரும் அல்லது அவற்றுள் இரண்டோ மூன்றோ பெற்றுக் காப்பியம் தொடங்க வேண்டும்.

'அத்திப் பூ' காப்பியம் தெய்வத்தை வணங்கித் தொடங்கப்பட்டுள்ளது. முருகர் வணக்கம், கலைமகள் துதி, சிவன் வணக்கம், சக்தி வணக்கம், திருமால் துதி, திருமகள் துதி, பாண்டி முனிஐயா துதி, பெரும்பாலன் துதி, கருமாரி துதி என ஒன்பது தெய்வத்தை வணங்கி இக்காப்பியம் தொடங்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

**முருகர் வணக்கம்**

"நினைந்துளங் கசிந்தே யுன்றன்
நீள்கழல் பணிவார் தம்மை
நினைந்தருள் செய்து காக்கும்
நேர்த்தியாய் நிறைவார் செந்தேன்
நனையெழில் அலங்கல் பூணும்
நற்றவ முருக வேளே!
இணைந்திரு கரங்கு வித்தேன்
இன்பமே போற்றி! போற்றி!"

என்ற முருக தெய்வத்தை முதலில் வணங்கி இந்த அத்திப் பூ காப்பியம் தொடங்கியுள்ளது. ஆக, தண்டியலங்காரத்தின் பெருங்காப்பியத்தின் முதல் கூறு இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது.

**அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளைப் பயனாகத் தருவதாக அமைய வேண்டும்.**

'அத்திப் பூ' காப்பியத்தில் மருதநாட்டு மன்னன் மார வர்மன் வாயிலாக **அறம்** உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது, தனது மகளினை அரவம் தீண்டிய பிறகு காப்பாற்றிய அமுதனை செய்ந் நன்றியோடு அறிந்து நினைக்கின்றான். சான்றாக,

"...நன்றினைச் செய்தாய் எங்கள்
நங்கையின் உயிரைக் காத்தாய்
உன்றனை எங்கள் உள்ளம்
ஒருபோதும் மறவா துண்மை
என்றுமெம் நெஞ்சத் துள்ளே
இடமுனக் குண்டென் பாரே!"
(மலர்ச்சிக் காண்டம்(1) – நன்றி உரைத்தபடலம்(7) – பா. 12)

இப்பாடலில் செய்த நன்றியை எண்ணி பார்க்கும் அறங் கூற்று வெளிப்படுகின்றது. இதுமட்டுமில்லாமல், இக்காப்பியத்தில் மன்னன் மக்கட்பேறு பெறுதல், இறுதியில் மன்னன் துறவு செல்லுதல், ஒழுக்கமுடைமை, புகழ், கூடாவொழுக்கம் போன்ற பல இடத்தில் அறம் வெளிப்பட்டுள்ளது.

அடுத்து, இக்காப்பியத்தில் பொருளும் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

"இனவெறியால் பணத்திமிரால் ஆட்சிப் போதை
ஏறியதால் பிறர்துன்பம் எண்ணி டாமல்
மனவெறியால் அடிமைகள்என் ஆணை கேட்டு
வணங்குதற்குப் பிறந்தவர்கள் எனும்ம தற்பால்
சினவிரிய னாய்அலைந்தே னல்லா லுண்மை

தெளிகின்ற திறன்பெற்றே னில்லை யென்றன்
அணங்கவளைக் காதலித்தான் என்று சொல்லி
அவர்களுக்குச் செய்ததுயர் என்ன சொல்வேன்
(மறுமலர்ச்சிக் காண்டம்(4) – திருமணப் படலம்(12) – பா. 120)

என்ற பாடலின் வழி அரசியலில் கொடுங்கோன்மையை எடுத்துரைக்கின்றது. மாரவர்மன் இனப் பாகுபாட்டால் காப்பியத் தலைவனான அமுதனுக்கும் அவனைச் சார்ந்தவருக்கும் நாட்டு மக்களுக்கும் தீங்கு விளைவித்துக் கொடிய அரசாட்சியைச் செய்தது இதன் வழி அறிய முடிகின்றது.

தொடர்ந்து, 'அத்திப் பூ' காப்பியத்தில் **இன்பமும்** இயம்பப்பட்டுள்ளது. காட்டாக,

"என்றவண் இணைந்தி ருக்கு
மெழில்மண மக்கள் கோலம்
கண்டவர் உள்ள வானில்
கற்பனை உடுக்கள் தோன்ற
திண்டிரல் வாகு மிக்க
திருமிகு நாட்டு வேந்தர்
கொண்டுவந் திருக்கும் தங்கள்
பரிசுகள் குவித்தார் மாதோ!"
(மறுமலர்ச்சிக் காண்டம்(4) – திருமணப் படலம்(12) – பா. 79)

என்ற பாடல் காப்பியத் தலைவன் அமுதனின் மற்றும் ஆனந்தியின் திருமணக் கோலத்தை விவரிக்கின்றது. அமுதன் மன்னரின் மகளான ஆனந்தியைக் காதலித்து இறுதியில் திருமணம் புரிந்து இல்லற வாழ்வில் இன்புற்று இணைகின்றதை இப்பாடல் உணர்த்துகிறது.

அத்திப் பூ காப்பியத்தில் **வீடு** எனும் நான்காவது பொருளும் இடம்பெற்றுள்ளது. சான்றாக,

"மருதத்துப் பெருமன்னன் முடிது றந்து
மாசற்ற நல்லடியார் வடிவு கொள்ள
மறுவற்ற பெரியோர்கள் அவன்சி றப்பை
மகவுப்பெறப் போம்மகளை வாழ்த்து வார்போல்.."
(மறுமலர்ச்சிக் காண்டம்(4) – திருமணப் படலம்(12) – பா. 138)

என்று பாடல் அமைகிறது. இப்பாடலின் வழி இறுதியாக மார வர்மன் அனைத்துச் சுகங்களையும் துறந்து மாசில்லாத இறைவன் அடியைத் தேடிச் செல்வதைக் குறிக்கிறது. ஆகவே, இந்தக் காப்பியத்தில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளும் வெளிப்பட்டுள்ளது.

**தன்னிகர் இல்லாத தன்மை உடையவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டிருத்தல் வேண்டும்.**

இத்தகைய தன்மையுடைய தலைவனாக அமுதனை இக்காப்பியம் கொண்டிருக்கிறது. அமுதன் மருத்துவக் குடியில் பிறந்து, வீரமும் விவேகமும் உடையவனாய்க் காப்பியத்தில் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக,

“எவரென்னைப் பழித்தாலும் கவலேன் பாரில்
என்நாடும் என்னரசும் வாழ்க வென்றே
நவலோகப் பொறைச்செல்வன் அமுதன், கொண்ட
நஞ்சதனைத் தன்பெயராய் பருகி ஓய்ந்தான்
(சூழ்ச்சிக் காண்டம்(2) - தங்கை உயிர்மீட்ட படலம்(4) – பா. 8)

இப்பாடலின் வழி மன்னன் மகளை உளமார காதலிக்கும் ஆனந்தியைக் கைவிட மாட்டேன் என்று வாய்மையினால் உயிரை விடத்தயாராகிறான். அடுத்து,

“எப்படி பிழைத்தேன் என்னை
ஈங்கெவர் பிழைக்க வைத்தார்
செப்படி வித்தை ஒக்கும்
செயலினை யாவர் செய்தார்
தப்படி பதியா வென்மேற்
சாற்றுவீண் களங்கம் மேவ
இப்படிச் செய்ய லாமோ
எனக்கனன் றமுதன் கேட்டான்”
(சூழ்ச்சிக் காண்டம்(2) - காதலர் சந்திப்புப் படலம்(7) – பா. 12)

என்ற பாடலின் வழி தாமரையால் காப்பாற்றப்பட்டு உயிருடன் இருப்பதை அறிந்த அமுதன் தான் இறக்காமல் இருப்பது வாய்மையாகது. அது மன்னர்க்குச் செய்யும்

துரோகம் என்று மன்னரின் ஆணைப் படி தான் இறந்துதான் ஆக வேண்டும் என்ற வாய்மையை நிலை நாட்டுகிறான். எனவே, இக்காப்பியத்தில் தன்னிகர் இல்லாத தன்மை கொண்ட காப்பியத் தலைவனாக அமுதன் இடம்பெற்றுள்ளான்.

**மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரனின் தோற்றம் ஆகியவற்றைப் பற்றிய வருணைனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

இக்காப்பியத்தில் கதிரவன் தோற்றம், நாடு, நகர் பற்றி வருணைனைகளைக் கொண்டுள்ளது. சான்றாக,

கதிரவன் உதயம்
"உறுபுகழ் விரிந்த வையத்
தொப்பிலா வுயர்வு மேவும்
அரும்புகழ் மருத மேன்மை
அவணியோ ரறிவான் வேண்டி
இருளெனும் எழினி நீக்கி
எழில்மிகு கலைய ரங்கைத்
திறந்துவைப் பானே போன்று
தினகரன் உதயம் செய்தான்!"
(மலர்ச்சிக் காண்டம்(1) – நாட்டுப் படலம்(2) – பா. 1)

என்ற பாடலின் வாயிலாக, கதிரவனின் தோற்றம் பற்றிய வருணையைக் காண முடிகின்றது. ஆக, 'அத்திப் பூ' காப்பியத்தில் கதிரவன் தோற்றம், நாடு, நகர் பற்றி வருணைனைகள் இடம்பெற்றுள்ளது.

**திருமணம் புரிதல், முடிசூடல், சோலையில் இன்புறுதல், நீர் விளையாடல், மதுவுண்டு களித்தல், மக்களைப் பெற்றெடுத்தல், ஊடல் கொள்ளுதளம் புணர்ச்சியில் மகிழ்தல் முதலிய நிகழ்வுகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

அத்திப் பூ காப்பியத்தில் இவ்வகை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளது. சான்றாக,

"..நற்புனிதன் இனிநாட்டின் மன்னன் என்றே

(மறுமலர்ச்சிக் காண்டம்(4) – திருமணப் படலம்(12) – பா. 136)

மாரவர்மன் தனதுமணி முடியைத் தூக்கி

மகன்தலையில் வைத்திட்டான் அதைதொ டர்ந்து

(மறுமலர்ச்சிக் காண்டம்(4) – திருமணப் படலம்(12) – பா. 137)

என்ற பாடலின் மூலம் இக்காப்பியத்தில் முடிசூடல் நிகழ்ந்துள்ளதைக் காண முடிகின்றது. முடிசூடல், திருமணம் புரிதல், மக்கட்பேறு பெறுதல் போன்றவையெல்லாம் இந்த 'அத்திப் பூ 'காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. ஆகவே, இக்காப்பியத்தில் தண்டியலங்காரத்தில் ஐந்தாம் பெருங்காப்பிய இலக்கணக் கூறு இருக்கின்றது.

**அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தல், தூது செல்லல், போர் மேற்கொண்டு செல்லுதல், போர் நிகழ்ச்சி, வெற்றிப் பெறுதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறுதல் வேண்டும்.**

இக்காப்பியத்தில் தூது செல்லல், போர் மேற்கொண்டு செல்லுதல், போர் நிகழ்ச்சி, வெற்றிப் பெறுதல் போன்ற நிகழ்வுகள் நடந்துள்ளது. எடுத்துக்காட்டாக,

"கடல்தாண்டி மலைதாண்டி காட்டாறு
பல்லிடருங் கடந்து, துன்பக்
கடல்தாண்ட முடியாமல் தாய்மண்ணின்
பற்றோடு கவலை போர்த்தத்
தடந்தோள னமுதனைக்கண் டுவகையுடன்
முல்லையான் தந்த ஓலை
திடமோங்கு நெஞ்சுடையன் தூதுபிற
ரறியாமல் நேரிற் சேர்த்தான்"

(திருப்பக் காண்டம்(3) – அமுதனுக்கு முல்லையான் தூதனுப்பிய படலம்(10) –*பா. 5)*

என்ற பாடலில் காப்பியத் தலைவனான அமுதனுக்கு வயிரவேலின் மூலம் முல்லையான் தூது அனுப்புகிறான் என்பதைக் காட்டுகின்றது. எனவே, இக்காப்பியத்தில் தூது செல்லல், போர் நிகழ்ச்சி, வெற்றிப் பெறுதல் போன்ற தண்டியலங்காரத்தில் ஆறாம் பெருங்காப்பிய இலக்கணக் கூறு அமைந்துள்ளது.

**சந்தி எனப்படும் கதைப்போக்கு, கதைத் தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு என்ற வரிசைப்படி அமைந்திருக்க வேண்டும்.**

அத்திப் பூ காப்பியத்தில் இக்கதைப் போக்கு அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. அதாவது, காப்பியத் தலைவன் ஆன அமுதன் நாட்டுப்பற்றோடு இருப்பதுடன், அவன் நற்பண்புகளில் மார வர்மனின் மகள் ஆனந்தி கவரப்படுகிறாள். இருவரின் திருமணத்திற்கு இன வேறுபாடு காரணியாக வந்து சிக்கலை உண்டாக்குகின்றது. இதன் விளைவால், அமுதனும் ஆனந்தியும் பல இன்னல்களை அடைவதையும் அவற்றினில் இருந்து மீளுகின்ற நிலையும் தொடர்ந்து கூறப்பட்டுள்ளது. இறுதியாக, அமுதன், ஆனந்தி திருமணத்தின் போது, மன்னன் மார வர்மன் தனது மகனான புனிதனை மன்னன் ஆக்கி, உடன் அமுதனை நாற்படைக்கும் தலைவன் ஆக்கி அனைத்துச் சுகங்களையும் துறக்கிறான். இதுவே, இக்காப்பியத்தின் சந்தியாக அமைகின்றது. ஆக, இக்காப்பியத்தில் ஏழாம் கூறான கதைப் போக்கு இடம்பெற்றுள்ளதைக் காண முடிகின்றது.

**அமைப்பு முறையில் பெருங்காப்பியம் உட்பிரிவுகளுக்குச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம், காதை, படலம், காண்டம் என்ற பெயர்களில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

அவ்வகையில் ‘அத்திப் பூ’ காப்பியம் நான்கு காண்ட அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. அவை; மலர்ச்சிக்காண்டம், சூழ்ச்சிக் காண்டம், திருப்பக் காண்டம், மறுமலர்ச்சிக் காண்டம் ஆகும். இந்த நான்கு காண்ட அடிப்படையின் கீழ் படலாமாக இந்நூல் ஆசிரியர் வகுத்துள்ளார். மொத்தம் 55 படலம் இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. அதில், நாட்டுப் படலம், நகரப் படலம், வீரவிழாப் படலம், கயவர் சிறு செயற் படலம், அரவு தீண்டிய படலம், நன்றி உரைத்த படலம், தீர்ப்புப் படலம், அடைக்கலப் படலம், மன்னன் நோயுற்ற படலம், வயிரவேல் விடுதலை பெற்ற படலம் போன்றவை அடங்கும். ஆக, இக்காப்பியம் பொதுவாகக் காண்டம், படலம் என்ற பெருங்காப்பிய அமைப்பு முறையிலே எழுதப்பட்டுள்ளது.

**பெருங்காப்பியம் எண்வகைச் சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்புகளும் கேட்போர் விரும்பும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.**

இந்த ஒன்பதாம் கூறான நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகைப் போன்ற எண்சுவை மெய்ப்பாடுகளும் 'அத்திப் பூ' காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. சான்றாக,

"என்றவன் பதறி யுற்ற
இருங்குழற் பிய்த்தாள், பக்கம்
நின்றவர் மருளும் வண்ணம்
நீலியாய் உருவெ டுத்தாள்
அன்றலர் கமலக் கண்ண
ஆவரம் பூவ ணத்தாள்
மன்றினில் ஆடா நின்ற
மலர்க்கொடி புயலே ஆனாள்"
(மறுமலர்ச்சிக் காண்டம்(4) – அமுதன் வீழ்ந்திட்ட படலம்(3) – பா. 53)

என்ற பாட்டின் வழி ஆனந்தியின் இளிவரல் நிலையினை வெளிக்காட்டுகின்றது. அதாவது, போரில் வெற்றிப் பெற்ற மீளும் அமுதனை, அமைச்சர் செங்கண்ணனும் அவனது மகன் நஞ்சப்பனும் மறைந்திருந்து அம்பு எய்து வீழ்த்துகின்றனர். இதைக் கண்ணால் கண்ட ஆனந்தியின் வருத்தத்தக்க நிலையை இப்பாடல் எடுத்துக்கூறுகின்றது. மேலும், இக்காப்பிய இறுதி இன்பியலாகத் திருமணத்துடன் முடிந்து உவகை எனும் மெய்ப்பாட்டினையும் வெளிப்படுத்துகின்றது. ஆக, 'அத்திப் பூ' காப்பியத்தில் பெருங்காப்பியத்தின் ஒன்பதாம் கூறு இடம்பெற்றுள்ளதை அரிய முடிகின்றது.

**கற்றறிந்த புலவரால் புனையப்பட்டதாக இருத்தல் வேண்டும்.**

இக்காப்பியத்தை இயற்றியவர் தமிழ்க் கவிமணி டாக்டர். இரா. பாண்டியன் என்பவர் ஆவார். இவர் மருத்துவத் துறையில் பட்டம் பெற்றுத் தமிழிலும் ஆழக் கற்றுத் தேர்ந்தவர் ஆவார். இவர் பல கவிதைத் தொகுப்புகளையும் பக்திப் பனுவல்களையும்

இதற்கு முன்னர் இயற்றியுள்ளார். மேலும், தண்ணீர் மலையப்பன் திருப்புகழ்ச்சி மாலை, வரதவிநாயகர் பிள்ளைத் தமிழ் என்ற சிற்றிலக்கியங்களையும் பூங்கொடி என்ற இன்னொரு காப்பியத்தையும் படைத்துள்ளார். ஆகவே, கற்றறிந்த, புலமை மிக்கப் புலவராலே இக்காப்பியம் புனையப்பட்டுள்ளது.

**முடிவுரை**

அத்திப் பூ என்ற இந்த மலேசியத் தமிழ்க் காப்பியம் பெருங்காப்பியத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் கூறுகளையும் பெற்றுள்ளது என்பதை உறுதிபடக் கூறலாம். ஆக, 'அத்திப் பூ' மலேசியத் தமிழ் பெருங்காப்பியமே என்று கூறலாம். இருப்பினும், மலேசியக் காப்பிய வரலாற்றில் மிகக் குறைவான காப்பியங்களே உள்ளது. இதனைக் களைய, வருங்காலங்களில் இதுபோன்ற பல பெருங்காப்பியத்தை மலேசியக் கவிஞர்கள் படைக்க முன் வர வேண்டும். மேலும், மலேசியக் காப்பியங்கள் பற்றிய ஆய்வுகளும் பள்ளிப் பாடங்களில் இணைத்து மாணவர்களுக்கும் காப்பியத்தின்பால் ஆர்வத்தையும் ஈர்ப்பையும் உண்டாக்க வேண்டும்.

## References

Gurumoorthy. (2021). *Women in Pulavar Kulanthai's Ravana Kaviyam*. *International Research Journal of Tamil*, 181-188.

Narayana, V. (2019). *Aimperum Kaappiyangal-The Five Classics of Tamil - Synopsis and dissertation.* Chennai: Narmadha Pathipagam.

Pandiyan, R. (1990). *Atthip Poo.* Penang: Kala Nilaiyam .

Samikkanu Jabamoney, I. S., & Rajantheran, M. (2020). *The Growth of Tamil Poetry in Malaysia* . Chennai: Sakthi Printers .